ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1466/5 - 2006 ඔක්තෝබර් 10 වැනි අඟහරුවාදා - 2006.10.10
1466/5 ஆம் இலக்கம் – 2006 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 10 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ. பீ. 4/81 III.

### 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டம்

23ய என்னும் பிரிவின் கீழான கட்டளை

காலத்திற்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் 23ய என்னும் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, சூழல் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், 2007, சனவரி 1 ஆம் திகதியிலிருந்து பயனுறுவதாக, இக்கட்டளைமூலம்–

(i) உள்நாட்டுப் பாவனைக்கு இருபது (20) மைக்ரோன்கள் அல்லது அதற்கு கீழான தடிப்பமுள்ள பொலித்தீன் அல்லது ஏதேனும் பொலித்தின் உற்பத்திப்பொருளின் தயாரிப்பினை ;

(ii) இருபது (20) மைக்கிரோன்கள் அல்லது அதற்கு கீழான தடிப்பமுள்ள பொலித்தீன் அல்லது ஏதேனும் பொலித்தீன் உற்பத்திப் பொருளின் விற்பனையை அல்லது பயன்பாட்டை ;

தடைசெய்கின்றேன்.

இக்கட்டளையின் நோக்கங்களுக்காக, பொலித்தீன் என்பது எல்லாத் தன்மையதான பொலித்தீலின், பொலிபுறோபைலின், பொலிஸ்ரரின், பொலிவைனல் குளோரைட்டு, பொலித்தீலின் ரெரிப்தவேற் அல்லது அதேபோன்ற வேறு ஏதேனும் மூலப்பொருள் என்பவற்றைப் பயன்படுத்தி காவிச்செல்லும், பொதிசெய்யும், மூடிச்சுற்றும் அல்லது சிப்பமாக்கும் நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுவதும் தயாரிக்கப்படுவதுமான எவையேனும் திண்ம உற்பத்திப் பொருட்கள், பைகள், மூலப்பொருள் அல்லது கொள்கலன்கள் எனப்பொருள்படும்.

மைத்திரிபால சிறிசேன,
சூழல் அமைச்சர்.

கொழும்பு,
2006, செத்தெம்பர் 30.

10-516

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.